REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 08 | விலை - ரூபா 20 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :119 பங்குனி 15ஆம் நாள் வெள்ளிக்கிழமை 27 மார்ச் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## கொரோனா 106

கொழும்பு, மார்ச் 27
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் நால்வர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 106 ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் நால்வர் குணமடைந்துள்ளனர். அவர்கள் கொழும்பு அங்கொடை தேசிய தொற்று நோயியல் மருத்துவமனையிலிருந்து நேற்று மாலை வெளியேறியுள்ளனர் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித் 02

## பொலிஸாருக்கு லீவு இல்லை

கொழும்பு, மார்ச் 27
எதிர்வரும் ஏப்ரல் 10ஆம் திகதி வரையில் அனைத்துப் பொலிஸாரினதும் விடுமுறைகள் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நிறுத்தப்படுவதாக பொலிஸ்மா அதிபர் அறிவித்துள்ளார். (ஒ,5)

## கைது 3,296

கொழும்பு, மார்ச் 27
நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றத்துக்காக இதுவரை 3 ஆயிரத்து 296 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்களிடமிருந்து 794 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமை 02

## பண்டிகை முற்கொடுப்பனவு இல்லை

கொழும்பு, மார்ச் 27
ஏப்ரல் மாத சம்பளம் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், சிங்கள தமிழ் புது வருட பண்டிகைக்கான முற்கொடுப்பனவுகள் வழங்க 02

# யாழ்ப்பாணத்தில் இன்னும் கொரோனா தொற்றாளர்கள் சுதந்திரமாக நடமாட்டம்?

### ஊரடங்கு நீடிக்கப்படுவதற்கு இதுவும் காரணம் எனத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27
கொரோனா அபாய வலயமாக அறிவிக்கப்பட்டுள்ள கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களுடன் இணைந்து யாழ்ப்பாண மாவட்டத்திலும் ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரை நீடிக்கப்பட்டுள்ளது. 02

## அபாய வலயத்துள் வடக்கு

### அரசு அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 27
கொரோனா வைரஸ் பரவுவதற்கான அதிக இடர் நிலைமை உள்ள கொழும்பு, களுத்துறை, கம்பஹா, புத்தளம் மாவட்டங்களுடன் வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கும் உள்வாங்கப்பட்டுள்ளன.
ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று இரவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த 02

## யாழில் இன்றும் ஊரடங்கு நீங்காது

### மறு அறிவித்தல் வரை திடீர் நீடிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27
வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் நடைமுறையிலிருந்த ஊரடங்குச் சட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு நீக்கப்படவிருந்தது. எனினும், தற்போதைய நிலைமையைக் கருத்தில்கொண்டு யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு மட்டும் மறு அறிவித்தல் வரை ஊரடங்குச் சட்டத்தை அரசு திடீரென நீடித்துள்ளது. 02

## 4 வயது சிறுமிக்கு கொரோனா?

### சந்தேகத்தில் யாழ். போதனாவில்

யாழ்ப்பாணம், மார்ச் 26
கொரோனா நோயாளியின் சகோதரியின் மகளான 4 வயதுச் சிறுமிக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுக் காலை சேர்க்கப்பட்டார்.
தாவடியில் கொரோனா நோயாளி ஒருவர் கடந்த ஞாயிற்றுக் கிழமை அடையாளம் காணப்ப 02

முச்சந்தி முரளி



"கொரோனாவை விடவும் கெட்ட கிருமியை வெளியில விட்டிருக்கினம் பாருங்கோ"

## பலசரக்குக் கடைகளை திறப்பதற்கு அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 27
பலசரக்கு கடைகள் பொது மக்களின் தேவைகளுக்காக தொடர்ந்து திறந்து நடத்துவதற்காக அனுமதி வழங்கபட்டுள்ளது. சுற்று வட்டாரத்தில் 06

### கொரோனா அறிகுறியுடன்

## சுவிஸ், பிரான்ஸில் தமிழர்கள் இறப்பு!

கொழும்பு, மார்ச் 27
கொரோனா தொற்று அறிகுறிகளுடன் சுவிஸ் மற்றும் பிரான்ஸில் இரண்டு இலங்கையர்கள் உயிரிழந்துள்ளனர். இவர்கள் இருவரும் யாழ்ப்பாணத்திலிருந்து புலம்பெயர்ந்து வசித்து வந்தவர்களாவர். 02

## வீட்டிலிருந்து வேலை மீண்டும் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 27
எதிர்வரும் 30ஆம் திகதி முதல் ஏப்ரல் 3ஆம் திகதி வரை வீடுகளில் இருந்து வேலைசெய்யும் காலமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.
அத்தியாவசிய சேவையாக குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் தவிர்ந்த அனைத்து அரச மற்றும் தனியார் நிறுவ 02

### மிருசுவிலில் 8 அப்பாவி மக்களை

## கழுத்தறுத்துக் கொன்ற படையதிகாரி விடுவிப்பு

- சாவுத் தண்டனை விதிக்கப்பட்டவருக்கு பொதுமன்னிப்பு
- கொரோனா அமளியில் கோத்தா நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 27
மிருசுவிலில் எட்டு தமிழர்கள் குரல்வளை அறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட சார்ஜென்ட் சுனில் ரத்நாயக்கா 06



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அனுமதி பெறப்படாது

# மக்களுக்கு நிவாரணம் விநியோகிக்கத் தடை

## முல்லை மாவட்டச் செயலர் அறிவிப்பு

முல்லைத்தீவு,மார்ச் 27
முல்லைத்தீவு மாவட்டத்தில், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம அலுவலர் எவரினதும் அனுமதி பெறப்படாது, பலரும் நிவாரணங்களை மக்களுக்கு வழங்குவதாக அறிய முடிகின்றது.

அவ்வாறு அனுமதி பெறப்படாது நிவாரணங்கள் வழங்கப்படுமாயின், பொலிஸாரின் மூலம் நிவாரண விநியோகம் தடை செய்யப்படும் என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன் அறிவித்துள்ளார்.

ஒரு சில நிறுவனங்கள் தனிப்பட்ட ரீதியில் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதாக தகவல்கள் கிடைத்துள்ளன. இந்தச் செயற்பாடு முற்று முழுதாகத் தடை செய்யப்பட வேண்டும். எந்தவொரு நிவாரணம் வழங்கப்படும் போதும், மாவட்டச் செயலரின் அனுமதி பெற்று, உரிய பிரதேச செயலர் மற்றும் கிராம சேவகர்களூடாகவே வழங்கப்பட வேண்டும். தகுந்த நபர்களுக்கு உரிய நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட வேண்டும்.

அதனால் அனுமதி பெறப்படாமல் நிவாரணங்கள் வழங்கப்படின் அவ்வாறான நிவாரண விநியோகத்தைத் தடை செய்யத் தீர்மானித்துள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க246)

### கொரோனா...

துள்ளது.

அதற்கமைய, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 7ஆக அதிகரித்துள்ளது. ஏனைய 97 நோயாளர்களும் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் 86 பேர் அங்கொடை தேசிய தொற்று நோயியல் மருத்துவமனையிலும், 10 பேர் வெலிகந்தை ஆதார மருத்துவமனையிலும், ஒருவர் முல்லேரியா ஆதார மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அங்கொடை தேசிய தொற்று நோயியல் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் 86 பேரில் மூவர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் மூவரது நிலை கவலைக்கிடமாக இருக்கின்றது என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன. ஏனைய 83 பேரும் சாதாரண சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் 237 பேர் பல்வேறு மருத்துவமனைகளில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் என்று சுகாதார அமைச்சு மேலும் கூறியுள்ளது. (ஒ,5,22)

### கைது...

யகம் தெரிவித்துள்ளது. இவர்களில் 158 பேர் இன்று மாலை 6 மணி நேரத்தில் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (ஒ,5)

### பண்டிகை...

ப்பட மாட்டாது என்று பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலர் எஸ். ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். இதேவேளை, ஏப்ரல் மாத சம்பளம் 10ஆம் திகதி வழங்கப்படும் என்று நிதி அமைச்சு அறிவித்துள்ளது. (ஒ,5)

### அபாய...

விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதிக்கு அரசமைப்பால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் கொரோனா வைரஸ் தொற்றை இலங்கையிலிருந்து ஒழிப்பதில் அனைத்து மக்களினதும் இயல்பு வாழ்க்கையை சுமுகமாக பேணுவதற்கான நெறிப்படுத்தல் அதிகாரம் தற்போது உருவாக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணிக்கு வழங்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவுவதற்கான அதிக இடர் நிலைமை உள்ள கொழும்பு, களுத்துறை, கம்பஹா, புத்தளம், யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்து ஏனைய மாவட்டங்களுக்கும் செயலணி கவனம் செலுத்த வேண்டும் என்றுள்ளது. (ஒ,5)

### 4 வயது...

ட்டிருந்தார். அதனையடுத்து தாவடிப் பிரதேசம் முழுமையாக தனிமைப்படுத்தப்பட்டது. ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் அந்தப் பகுதியில் நிறுத்தப்பட்டு கண்காணிப்பு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கொரோனோ நோயாளியின் வீட்டுக்கு அருகில் வசிக்கும், அவரது சகோதரியின் மகளுக்கு நேற்று முன் தினம் மாலை காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. நேற்றுக் காலை அவர் நோயாளர் காவு வண்டிமூலம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ஒ,5)

### சுவிஸ்...

சுவிஸில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த புங்குடுதீவைச் சேர்ந்த 61 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார். இவர் சூரிச் சென்று வந்திருந்த நிலையில், கொரோனாவுக்கான ஆரம்ப அறிகுறிகளுடன் தனிமைப்படுத்தப்பட்டிருந்ததாக உயிரிழந்தவரின் மகள் தெரிவித்தார்.

இதேவேளை, பிரான்ஸில் வசித்து வந்த யாழ்ப்பாணம் தாவடியைப் பிறப்பிடமாகக் கொண்ட 32 வயதான ஒருவரும் நோய் அறிகுறியுடன் உயிரிழந்துள்ளார்.

இவர்கள் இருவரின் உயிரிழப்புத் தொடர்பில் வெளிவிவகார அமைச்சிடம் கேட்டபோது, பிரான்ஸில் இலங்கை பிரஜை ஒருவர் தீவிர கண்காணிப்பு பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக தகவல் கிடைத்திருந்ததாக வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

சுவிட்சர்லாந்தில் இலங்கையர் ஒருவர் உயிரிழந்திருப்பதாக அந்நாட்டு அரசால் அறிவிக்கப்பட்டாலும், உயிரிழப்புக்கான காரணம் இதுவரை அறிவிக்கப்படவில்லை, என்று அவர் குறிப்பிட்டார். (ஒ,5,105)

### வீட்டிலிருந்து..

னங்களுக்கும் இது ஏற்புடையதாகும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இக்காலப்பகுதி அரச விடுமுறை நாள்களாகக் கருதப்படமாட்டாது. மக்கள் சேவையை தொடர்ச்சியாக பேணுவது அரசின் பொறுப்பாகும். எனினும், மக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்த்து சுயநோய்த் தடுப்புக் காப்புக்கு இடமளிப்பது இதன் நோக்கமாகும்.

ஏற்கனவே மார்ச் 20ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரையான காலப்பகுதி வீட்டிலிருந்து வேலை செய்யும் வாரமாக அரசால் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. அந்த நடைமுறையை குறித்த காலப்பகுதியிலும் தொடர்ந்தும் முன்னெடுக்க அரசு தீர்மானித்துள்ளது என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஒ,5,22)

### யாழ்ப்பாணத்தில்...

ஊரடங்கு நீக்கத்தின்போது மக்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதும், கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் சுதந்திரமாக நடமாடித் திரிகின்றார்கள் என்பதுமே, ஊரடங்கை நீடிக்கக் காரணம் என்று அரச உயர் மட்டங்களிலிருந்து அறியமுடிகின்றது.

யாழ்ப்பாணத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டு மீண்டும் பி.ப. 2 மணிக்கு நடைமுறைப்படுத்தப்படும் எனவும், மீண்டும் திங்கட்கிழமை காலை 6 மணிக்கு ஊரடங்குச் சட்டம் நீக்கப்படும் எனவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு முன்னதாக அறிவித்திருந்தது.

எனினும் இந்த அறிவித்தல் வெளியாகி சுமார் அரை மணி நேரத்துக்குள், குடாநாட்டில் மறு அறிவித்தல் வரையில் ஊரடங்குச் சட்டம் நீடிக்கப்படுவதான அறிவிப்பு வெளியானது. அரசின் இந்தத் திடீர் அறிவிப்பு மக்களிடையே பெரும் பதற்றத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

இதேவேளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவார்கள் என்று எதிர்வு கூறப்படுகின்றது. பொதுமக்கள் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும் என்று தனது முகநூலில் பதிவிட்டிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டபோது பொதுமக்களை கட்டுப்படுத்த முடியவில்லை என்று பாதுகாப்புத் தரப்பினர் அரச உயர் மட்டங்களுக்கு அறிவித்திருந்தனர்.

அதனை விட கொரேனா தொற்றுக்குரிய மதபோதகர் கடந்த 15ஆம் திகதியே ஆராதனை நடத்தியிருந்ததும், அதன் பின்னர் தாவடியில் கொரோனோ தொற்றுக்குரியவர் இனம் காணப்பட்டதும் இடம்பெற்றிருந்தது. ஆகக் குறைந்தது 14 நாள்களுக்குள் அவர்களிலிருந்து வேறு எவருக்கும் பரவியிருக்கலாம் என்ற சந்தேகம் மருத்துவத் துறையினரிடம் எழுந்துள்ளது. கொரோனா தொற்றால் பாதிக்கப்படாமல், கொரோனா காவிகள் இருக்கக் கூடும் என்ற அச்சம் மருத்துவத் துறையினரால் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் ஊடரங்கைத் தளர்த்துவதானது, கொரோனா வேகமாகப் பரவுவதற்கு வழிகோலும் என்பதால் ஊரடங்கு மறு அறிவித்தல் வரை நீடிக்கப்பட வேண்டும் என்று மருத்துவத் துறையினர் கோரியிருந்தனர். இதனாலேயே ஊரடங்கு நீடிப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,5)

### யாழில்...

அதற்கமைய கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் தற்போது நடைமுறையிலுள்ள ஊரடங்குச் சட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்குத் தளர்த்தப்பட்டு பிற்பகல் 2 மணிக்கு மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும்.

இம்மாவட்டங்களில் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை 6 மணிக்கு நீக்கப்பட்டு அன்று பிற்பகல் 2 மணிக்கு மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும்.

கொரோனா வைரஸ் பரவலைக் கருத்தில்கொண்டு அதி அபாய வலயங்களாக அரசால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதைப் போன்று யாழ்ப்பாண மாவட்டத்திலும் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும்.

ஏனைய மாவட்டங்களில் நேற்று வியாழக்கிழமை காலை 6 மணிக்குத் தளர்த்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் நண்பகல் 12 மணிக்கு மீண்டும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஊரடங்குக் காலப் பகுதியில் மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் மற்றும் ஏனைய பொருள்களை வீடுகளில் இருந்தே கொள்வனவு செய்யக்கூடிய வகையில் தொடர்ச்சியாக வழங்கலை மேற்கொள்ள அரசு சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

இதேவேளை, ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் நேரங்களில் நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கிடையேயும் பயணம் செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இடத்துக்கு இடம் அழைத்துச் செல்வதும் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. (ஒ,5,22)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# புதைக்கப்பட்ட நீதி

கொரோனா வந்தாலென்ன, கொலாரா வந்தாலென்ன, உலகமே அழியும் நிலையில் இருந்தால் கூட , அந்தச் சந்தடியைச் சாக்காக வைத்து தமக்கேற்ற காரியங்களைச் செய்து கொள்வதிலேயே சிங்கள ஆட்சியாளர்கள் எப்போதும் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். நாடே கொரோனாவுக்குப் பயந்து முடக்கப்பட்டிருக்கும் காலத்தில் , மிருசுவில் படுகொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளியான சுனில் ரத்நாயக்கவுக்கு பொதுமன்னிப்பை வழங்கி, வீட்டுக்கு அனுப்பி வைத்து அழகு பார்த்திருக்கிறது கோத்தா அரசு.

சுனில் ரத்நாயக்க ஒன்றும், சந்தர்ப்ப வசத்தால் கொலையாளி ஆனவரல்லர். அத்தோடு அவரால் கொலையுண்டவர்கள் ஆயுதமேந்தியவர்களும் அல்லர். சுனில் ரத்நாயக்க தலைமையிலான படையணியால் மிருசுவிலில் கொல்லப்பட்ட எட்டுப்பேரும் அப்பாவிப் பொதுமக்கள். அந்த எண்மரில் ஐந்து வயதுச் சிறுவனும் உள்ளடக்கம். கொல்லப்பட்ட எண்மரும், அரசுக்கு எதிராக ஆயுத ரீதியாகவோ, ஜனநாயக ரீதியாகவோ எதிர்ப்பை வெளிப்படுத்தக் கூட இல்லை. தங்கள் சொந்த வீட்டைப் பார்த்து வரச் சென்றவர்கள். அத்தனை பேருமே மிகக் கொடூரமாக, சித்திரவதை செய்யப்பட்டு, குரல்வளை அறுக்கப்பட்டு, சிலமணி நேரம் துடிதுடிக்கச் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டனர். ஏதுமறியாத அந்த ஐந்து வயதுப் பாலகனின் கால் அடித்து முறிக்கப்பட்டு, அவனும் மிகக் குரூரமாக மண்ணுக்குள் புதைக்கப் பட்டிருந்தான். மிருசுவில் தென்னந்தோப்பு மணலுக்குள் அவசரமாக வெட்டப்பட்ட குழிக்குள் இருந்து மீட்கப்பட்ட அவர்களின் சடலங்களைப் பார்த்தாலே, கொலையாளிகள் அவர்களின் சாவை அணுவணுவாக ரசித்தே இந்தக் கொலைகளைச் செய்திருக்கிறார்கள் என்பது அப்பட்டமாகத் தெரிந்திருக்கும்.

இப்படிப்பட்ட குரூரக் கொலைகளைச் செய்தவர்கள் தகுந்த ஆதாரங்களோடு சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டபோதும், மற்றவர்கள் விடுவிக்கப்பட்டு, அந்தப் படையணிக்குப் பொறுப்பான, இந்தக் கொலைகளைச் செய்ய ஆணையைப் பிறப்பித்த சூத்திரதாரியான சுனில் ரத்நாயக்கவுக்கு மட்டுமே மரண தண்டனை விதிக்கப்பட்டது. சரி, இந்தளவிலாவது நீதி கிடைத்ததே என்று தமிழ் மக்கள் தங்கள் மனங்களை ஓரளவு ஆசுவாசப்படுத்திக் கொண்டது கூட பேரினவாதிகளுக்குப் பிடிக்கவில்லை. சுனில் ரத்நாயக்கவை விடுவிக்கவேண்டும் எனப் பேரினவாதிகள் ஆர்ப்பாட்டங்கள் செய்தார்கள். அந்த ஆர்ப்பாடங்கள் எல்லாம் அடங்கிப் போன காலத்தில் ஆட்சிக்கு வந்த கோத்தாபய, தன்னுடைய இராணுவ மற்றும் பேரின விசுவாசத்தைக் காட்டுவதற்காக நீதியைக் குழிதோண்டிப் புதைத்து விட்டு, சுனில் ரத்நாயக்கவை கொரோனா அமளிக்குள் விடுவித்திருக்கிறார்.

சரி, வாக்குகளுக்காகவோ அல்லது தன்னைப் போல சுனிலும் ஒரு தமிழினப் படுகொலையாளி என்ற பாசத்தாலோ கோத்தாபய இப்படிச் செய்திருக்கலாம். இப்படி எட்டுப் பேரைத் துடிக்கத் துடிக்கக் கொலை செய்த பாதகனுக்குப் பரிவு காட்டி விடுவிக்கும் கோத்தாபய, எந்தக் குற்றமும் செய்யாமல் பல வருடங்களாகச் சிறைப்பறவைகளாக இருக்கும், ஆனந்த சுதாகரன் போன்ற தமிழ் அரசியல்கைதிகளை விடுவிக்க மட்டும் சட்ட, திட்டம் பார்க்கிறார். தனிச் சிங்கள வாக்குகளால் தெரிவானாலும் சகல இனமக்களுக்குமான ஜனாதிபதியாக நடப்பேன் என வாய் நிறையச் சொன்னாலும், தான் எப்போதுமே கடைந்தெடுத்த இனவாதி என்ற கோரப்பற்களைக் கோத்தாபய அடிக்கடி வெளியே காட்டவே செய்கிறார்.

மிருசுவிலில் சுனில் ரத்நாயக்க தலைமையிலான கொலைப்படை, எண்மரையும் கொன்று புதைத்தார்கள். இன்று அவர்களுக்கான நீதியையும் அதே புதைகுழிக்குள் போட்டு மூடிவிட்டார் கோத்தாபய.

# பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தூங்குகிறதா?

யாழ்ப்பாணம், மார்ச் 27

**ஊரடங்குச் சட்டம் நடைமுறையிலுள்ள நிலையிலும் உணவுப் பொருள் விநியோகத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஒரு சில வியாபாரிகள் அதிகூடிய விலைக்குப் பொருள்களை விற்பனை செய்வதாக பொதுமக்களால் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. இது தொடர்பில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை கண்டு கொள்ளாமல் இருப்பதாகவும் அவர்கள் கவலை வெளியிடுகின்றனர்.**

இடர் நேரத்தில் சில வியாபாரிகள் சேவை நோக்குடன் செயற்படுகின்றனர். பொது மக்களுக்கான நிவாரண உதவிகள் உள்ளிட்டவற்றையும் வழங்குகின்றனர். அத்துடன் மிகக் குறைந்த இலாபத்துடனும் பொருள்களை மக்களுக்கு விநியோகிக்கின்றனர். இலவசமாகவும் வீடுகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். குடாநாட்டு மக்களுக்கு பொருள்கள் தட்டுப்பாடின்றி கிடைப்பதை உறுதி செய்வதற்காக மிகுந்த சிரமங்களின் மத்தியிலும் பொருள்களை தெற்கிலிருந்து கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர்.

ஆனால் ஒரு சில வியாபாரிகள் அதிகூடிய விலைக்கு பொருள்களை விற்பனை செய்வதாகப் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர். யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இயங்கும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரும் இதனைக் கண்டுகொள்ளவில்லை. அதேபோன்று உள்ளூராட்சி மன்றங்களும் பொலிஸாருடன் இணைந்து இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காமல் பேசாமல் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

நடமாடும் பாண் விநியோகத்தில் ஒரு இறாத்தல் பாண் 65 ரூபா வரைக்கும் விற்பனை செய்வதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. பாணின் விலை 58 ரூபா எனவும், ஆகக் குறைந்தது நடமாடும் சேவைக்குரிய கட்டணத்தையும் உள்வாங்கி 60 ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியும். ஆனாலும் 65 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. பேக்கரி உரிமையாளர்கள் இந்த அதிகரித்த விலையை நிர்ணயம் செய்யாத போதும், நடமாடும் சேவைக்கு செல்பவர்கள் தங்கள் இஷ்டத்துக்கு இவ்வாறு அதிகரித்த விலைக்கு விற்பனை செய்வதாகக் கூறப்படுகின்றது. இவை தொடர்பிலும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஒ,5)

# சந்தைப்படுத்தல்களை பரவலாக்க அறிவுறுத்து



முல்லைத்தீவு,மார்ச் 27

ஊரடங்கு தளர்த்தப்படும் போது மக்கள் சந்தைகளில் நெருக்கமாகக் காணப்படுவதுடன், பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்காக முண்டியடிக்கின்றனர்.

இத்தகைய சன நெரிசல்களைக் கட்டுப்படுத்த சந்தைகளைப் பரவலாக்குமாறு பிரதேச சபைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க. விமலநாதன் தெரிவித்தார்.

மாவட்டத்தில் இன்று ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படவுள்ளது. அவ்வாறு தளர்த்தப்படும் நேரத்தில் மக்கள் கூடுதலாக பொதுச் சந்தைகள் மற்றும் கடைகளில் அதிகமாகக் கூட்டம் கூடுகின்றனர். இப்படியான சந்தைகளை ஒரு இடத்தில் இல்லாமல் பரவலாக்கும் போது, குறிப்பாக பரந்த மைதானங்களிலோ அல்லது வீதிகளிலோ சந்தைப்படுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளும்போது சன நெரிசல் குறைவாக இருக்கும். எனவே அவ்வாறு கூட்டம் கூடுவதைக் குறைப்பதற்காக பிரதேச செயலகங்களினூடாக பிரதேச சபைகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இங்குள்ள சந்தைகள் சிறிய இடமாக இருப்பதால், மக்கள் மிகவும் நெருக்கமாகவும், முண்டியடித்தும் பொருள்களை வாங்கும் நிலையைக் குறைப்பதற்காக இந்த அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (க-246)

# கிளினிக் சிகிச்சை பெறுபவர்களுக்கு மருந்துகளை விநியோகிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச் 27

யாழ். போதனா வைத்தியசாலையில் கிளினிக் பிரிவுகளில் சிகிச்சை பெறுகின்ற தீவகப் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு, மருந்துகளை அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுத் தாக்கம் காரணமாக ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ளதால் நோயாளர் பெரும் பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக கிளினிக்கில் சிகிச்சை பெறுகின்றவர்கள் எதிர்நோக்கும் பாதிப்பையடுத்து, யாழ் போதனா வைத்தியசாலை நிர்வாகம் அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய இன்று 27 ஆம் திகதி தீவகத்தைச் சேர்ந்த மருத்துவ கிளினிக் பெறும் நோயாளர்களுக்கு மருந்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் 1 மணி வரையிலான நேரத்துக்குள் 0212222268 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து உரியவர்கள் தகவலைத் தெரிவிக்குமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார்.

அவ்வாறு தெரிவிக்குமிடத்து, உங்களுக்குத் தேவையான மருந்துகள் உங்களது பிரதேசத்துக்கு அருகிலுள்ள அரச வைத்தியசாலைகளுக்குப் பொதி செய்து அனுப்பி வைக்கப்படும்.

தீவகப் பிரதேசத்துக்காக முதலில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ள இந்த நடவடிக்கை தொடர்ந்து, ஏனைய பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்கப்படும். அது தொடர்பான அறிவித்தல்கள் பின்னர் வெளியிடப்படும் என்று பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க-20)



## முகக் கவசம் கட்டாயமில்லை: கை கழுவுதலே முக்கியம்

கொழும்பு, மார்ச் 27
கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காக முகக் கவசம் அணிவது கட்டாயமில்லை என்றும் கை கழுவுவதே கட்டாயம் என்றும் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் பொலிஸாரிடையே ஆரம்பத்தில் தெளிவின்மை காணப்பட்டதாகக் கூறிய அவர் இப்போது எல்லா பொலிஸாருக்கும் இது பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார். 'முகக் கவசம் அணிவது அவரவர் விருப்பம். ஆனால்,கை கழுவுவதும் தனிமைப்படுத்தலுமே கட்டாயம். இந்தச் செயற்பாடுகள்தான் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தும். சிறப்பு மருத்துவர்களின் கருத்தும் இதுவே' என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ஒ,5)

# அடுத்த வாரங்கள் ஆபத்தானவை!

## எச்சரிக்கின்றது அரசு

கொழும்பு, மார்ச் 27

**எதிர்வரும் இரு வாரத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்ற அச்சம் உள்ளது. அதற்காக மருத்துவமனைகள் மற்றும் தனிமைப்படுத்தல் முகாம்கள் மேலதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளன என்று அரசு தெரிவித்துள்ளது.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்தச் செய்தியாளர் சந்திப்பு நேற்று வியாழக்கிழமை அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண இதனைத் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
நாட்டின் அடுத்த இரு வாரங்களை சவால் நிறைந்த காலமாகமே நாம் கருதுகின்றோம். இந்த இரு வார காலத்தில் மக்கள் மிக அவதானமாகச் செயற்பட வேண்டும். முடிந்தளவு தனிப்பட்ட முறையில் மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். வீடுகளுக்குள் பாதுகாப்பாக இருப்பதே இவ்வாறான சூழலில் மக்கள் தம்மைப் பாதுகாக்க எடுக்கக் கூடிய சிறந்த முடிவாகும்.
சுகாதார துறையினர் எந்தவித தடைகளும் இல்லாது தமது சேவையை முன்னெடுக்க சுகாதார சேவையாளர்களுக்கு இடமளிக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசு அவர்களுக்குச் செய்து கொடுத்துள்ளது. மக்களின் பங்களிப்பும் அதில் அவசியம்.
அடுத்த இரண்டு வாரகாலத்தில் கொரோனா தொற்றாளர்கள் அதிகரிக்க வாய்ப்புகள் இருப்பதாக கருதுவதால் இப்போதே மருத்துவமனைகள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன. நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலையில் அவர்களை சிரமப்படுத்தாத வகையில் அவர்களுக்கான மருத்துவ வசதிகளை செய்து கொடுக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அதே போல் தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களும் தயார்ப்படுத்தப்பட்டுள்ளது.
மக்கள் எந்த விதத்திலும் அச்சம் கொள்ளத்தேவையில்லை. சுகாதார பணிப்பகம் மற்றும் அரசாங்கம் கூறும் ஆலோசனைகளை பின்பற்றி தம்மை பாதுகாப்பாக வைத்திருக்கும் நிலையில் வெகு விரைவில் நாட்டை எம்மால் இந்த சவால்களில் இருந்து விடுவித்துக்கொள்ள முடியும். அதற்காக சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்- என்றார். (எ)

## கொரோனா பலி 23,000ஆக உயர்வு

பீஜிங், மார்ச் 27
கொரோனாவால் உலக அளவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 23 ஆயிரத்தைத் தொட்டது.
கொரோனா வைரஸ் ஒவ்வொரு நாளும் பல்லாயிரம் மக்களைப் பாதித்து வருகின்றது. வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காக உலக நாடுகள் பலவும் ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்துள்ளன.
எனினும் இத்தாலி, ஸ்பெய்ன், ஈரான், பிரான்ஸ் நாடுகளில் கொரோனாவால் உயிரிழப்போர் எண்ணிக்கை சராசரியாக 2 ஆயிரமாக உள்ளது. இந்த நிலையில் உலக அளவில் இந்த வைரஸால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 23 ஆயிரமாக அதிகரித்துள்ளது. (ம)

## சங்கங்கள் ஊடாக இன்று நிவாரணம்

யாழ்ப்பாணம்,மார்ச் 27
பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் ஊடாக நிவாரணப்பொதிகள் வழங்கும் நடவடிக்கை இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளன. சமுர்த்தி நிவாரணம் பெற்று வரும் 76 ஆயிரம் வரையிலான குடும்பங்களுக்கு நிவாரணப் பொதிகள் முதற்கட்டமாக வழங்கப்படவுள்ளன.
ஆயிரத்து 500 ரூபா, 2 ஆயிரத்து 500 ரூபா,3 ஆயிரத்து 500ரூபா பெறுமதி வாய்ந்த உலர் உணவுப் பொருள்கள் அடங்கிய பொதிகள் நிவாரணமாக வழங்கப்படவுள்ளன. அரிசி,மா,சீனி,தேயிலை போன்ற பொருள்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்படும். அத்தியாவசிய தேவை கருதி அநேகமான கூட்டுறவுச்சங்கங்களின் களஞ்சியங்கள் நேற்றுத் திறக்கப்பட்டு நிவாரணப் பொருள்கள் அடங்கிய பொதிகள் தயார்ப்படுத்தப்பட்டன. (க-17)

# பிள்ளைகளின் பாதுகாப்பில் பெற்றோரே கவனமெடுங்கள்

## யாழ்.வலயப் பணிப்பாளர் அறிவுறுத்து
## கற்றல் கையேடுகளும் தயாராகின்றன

யாழ்ப்பாணம், மார்ச் 26
"பிள்ளைகளின் சுகாதாரப் பாதுகாப்பு, கல்வி ஆகிய இரு விடயங்களிலும் பெற்றோர் விஷேட கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளீர்கள். முதலாவதாகக் கவனம் செலுத்த வேண்டிய விடயம் உங்கள் பிள்ளைகளின் பாதுகாப்பு" என்று யாழ்ப்பாணக் கல்வி வலயப் பணிப்பாளர் செ.சந்திரராஜா தெரிவித்தார்.
பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில், பின்வரும் செயற்பாடுகளில் பெற்றோர்கள் விஷேட கவனம் செலுத்தவேண்டும் என அவர் விடுத்துள்ள அறிக்கையில் கோரியுள்ளார்.
1. பிள்ளைகளை வீட்டிலேயே வைத்திருங்கள். ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருந்தாலோ இல்லாவிட்டாலோ சரி எந்தக் காரணம் கொண்டும் பிள்ளைகளை வெளியில் விடவேண்டாம். ஆசிரியர்களுக்குரிய பணிகளை முடிந்தவரை பெற்றோர்கள் மேற்கொள்ளுங்கள். உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுங்கள்.
பிள்ளைகளை அறிவுறுத்திக் கண்காணித்துக் கொள்ளுங்கள்.
2. தற்போதைய சூழ்நிலையில் பாடசாலைக்கோ அல்லது வெளியிடங்களுக்கோ எவருடைய வேண்டுகோளின் பேரிலும் பிள்ளைகளை அனுப்புவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். பாடசாலைகளுக்கு எந்தவொரு விஷேட காரணத்தின் பேரிலாவது மாணவர்களையோ பெற்றோர்களையோ அழைப்பதைத் தவிர்க்குமாறு சகல அதிபர்களுக்கும் ஏற்கனவே என்னால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.
3. வீட்டிலிருந்தே பாடங்களைக் கற்றுக்கொள்ளப் பழகுங்கள், விஷேடமாக சகல மாணவர்களும் தங்களிடமுள்ள பாடப் புத்தகங்களை முறையாக வாசியுங்கள்.
முதலாம் தவணைக்குரிய அலகுகளை வாசித்து அவற்றிலிருந்து சுருக்கக் குறிப்புக்களை எடுத்துக் கொள்ளுங்கள். குறித்த பாடப் புத்தகங்களிலிருந்து வினாவிடை அடிப்படையில் தேடிக் கற்றுக் கொள்ள முயற்சியுங்கள்.
4. பாடசாலைகளில் கற்பித்த பாட அலகுகளை மீட்டல் செய்யுங்கள். வலயக் கல்விக் காரியாலயத்தால் வழங்கப்பட்ட கையேடுகளையும் வினா விடைப் புத்தகங்களையும் வீட்டிலிருந்தே கற்றுக் கொள்ளுங்கள்.
க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கான வினாவிடை அமைப்புக்கள் தயாரிக்கப்பட்டு உரிய வகையில் வழங்குவதற்கான நடவடிக்கைகளை வலயத்தின் கல்வி அபிவிருத்திப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர்.
வலயத்துக்குட்பட்ட சகல மாணவர்களுக்கும் உரிய பரீட்சை நோக்கிலான கற்றல் கையேடுகள் தற்போது வலயத்தின் பாடங்களுக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர்களால் தயார் செய்யப்படுகின்றன. உரிய காலத்தில் அவற்றை மாணவர்களுக்கு வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.
5. தேவையற்ற வகையில் பெற்றோர்களும் மாணவர்களும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த. உயர்தரப் பரீட்சை தொடர்பில் குழப்பமடைய வேண்டியதில்லை.
இப்போதைய தேவை பிள்ளைகளின் பாதுகாப்பு என்பதை விஷேட கவனத்திற்கொள்ளுமாறும் அறியத் தருகின்றேன். என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (கு)

# பஞ்சம் ஏற்படாது

## அரசு கூறுகின்றது

கொழும்பு, மார்ச் 27
இலங்கையில் ஏப்ரல் இறுதிவரை பொருள்களுக்கு எந்தவிதத் தட்டுப்பாடும் ஏற்படாது. தேவையானளவு இருப்பு நாட்டில் கைவசம் உள்ளது என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வழமையாக தமிழ், சிங்கள புத்தாண்டு வரும் வேளையில் முன்கூட்டியே பொருள்களை கைவசம் வைத்திருப்பதுதான் வியாபாரத் தந்திரமாக பின்பற்றப்பட்டு வருகின்றது. இந்த முறையும் அவ்வாறு நடந்துள்ளது. ஏப்ரல் இறுதிவரை அத்தியாவசியப் பொருள்கள் உட்பட இதர இறக்குமதிப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவாது. பருப்பு உட்பட சில பொருள்களை இலங்கையில் உற்பத்தி செய்யமுடியாது. உள்நாட்டில் குறுகிய காலத்துக்குள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காகவே பஸில் ராஜபக்ச தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துவதே எமது திட்டம்- என்றார். (எ-44)

## தனிமைப்படுத்தப்பட்ட தாவடிக்கு மானிய விலையில் பொருள்கள்

யாழ்ப்பாணம்,மார்ச் 27

யாழ்ப்பாணத்தில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள தாவடி கிராம மக்களுக்கு, சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் மானிய விலையில் அத்தியாவசியப் பொருள்கள் நேற்று விநியோகிக்கப்பட்டன.

உடுவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தாவடி கிழக்கு கிராமத்தில் வசித்தவரே யாழ்ப்பாணத்தில் முதல் கொரோனா நோயாளியாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதனால் ஜே/193 கிராம சேவகர் பிரிவு, வெளித்தொடர்புகள் இன்றி தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அந்த கிராம சேவகர் பிரிவில் வசிக்கின்ற சுமார் 300 குடும்பங்களின் நன்மை கருதி அத்தியாவசியப் பொருள்களை வீடுவீடாக விநியோகிக்குமாறு உடுவில் பிரதேச செயலர் த.முகுந்தனால், சுன்னாகம் ப.நோ.கூ. சங்கத்திடம் கோரிக்கை முன்வைக்கப் பட்டது.

அதனடிப்படையிலேயே சுன்னாகம் ப.நோ.கூ.சங்க வர்த்தக முகாமையாளர் வே.செல்வகாந்தன் தலைமையில், வீடு வீடாகச் சென்று மானிய விலையில் அத்தியாவசிய பொருள்கள் விநியோகிக்கப்பட்டன. (க)

## மத்திய வங்கி, வர்த்தக வங்கிகளை திறந்து வைக்குமாறு வேண்டுகோள்

கொழும்பு, மார்ச் 27

இலங்கை மத்திய வங்கி, வர்த்தக வங்கிகள், காப்புறுதி சேவைகள் மற்றும் திறைசேரி என்பவை ஜனாதிபதியால் அத்தியாவசிய சேவையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

சுகாதாரம், பாதுகாப்பு, பொலிஸ், பொருள்கள் விநியோகம், சுங்க நடவடிக்கை, மின்சாரம், நீர் மற்றும் எரிபொருள் விநியோகம் என்பன ஏனைய அத்தியாவசிய சேவைகளாகும்.

ஊரடங்குச் சட்டக் காலப்பகுதியிலும் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக குறைந்த ஊழியர்களுடன் இலங்கை மத்திய வங்கி, அனைத்து வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள், அவற்றின் கிளைகள் மற்றும் திறைசேரி என்பவற்றை திறந்து வைக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி பீ.பி ஜயசுந்தர மத்திய வங்கி ஆளுநர் பேராசிரியர் டபிள்யு.டீ. லக்ஸ்மனுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார். (ஒ,5,22)

# நாடாளுமன்றைக் கூட்டும் எந்தத் தீர்மானமுமில்லை!

### அரசு திட்டவட்டம்

**கொழும்பு, மார்ச் 27**
**கொரொனா வைரஸ் தொற்று நோய் பரவலால் நாடு முடக்கப்பட்டுள்ள நிலையில், நாடாளுமன்றத்தைக் கூட்ட எந்தத் தீர்மானமும் இல்லை என்று அரசு அறிவித்துள்ளது.**

நேற்று நடந்த வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அமைச்சரவை இணை ஊடகப் பேச்சாளர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த தற்போது வரையில் அரசு முன்னெடுத்து வருகின்ற சுகாதார வேலைத் திட்டங்கள் போதுமான உள்ளது. இறுதியாகக் கூடிய சர்வகட்சி கூட்டத்தில் அரசாங்கம் முன்வைத்த வேலைத்திட்டங்களை எதிர்க் கட்சியினர் அனைவரும் ஏற்றுக்கொண்டனர். அரசியல் பாகுபாடு இல்லாது அனைவரும் அதை ஏற்றுக் கொண்டனர்.

அதேபோல் நாடாளுமன்றத்தை உடனடியாக கூட்ட வேண்டும் என எதிர்க்கட்சி தரப்பினர் கோரிக்கை விடுத்தனர். நாடாளுமன்றத்தை கூட்டுவதற்கு அரசு எந்த தீர்மானமும் எடுக்கவில்லை. நாடாளுமன்றத்தைக் கூட்டி தீர்மானம் எடுக்கும் அளவுக்கு அரசு பலவீனமாக செயற்படவில்லை. இந்த தேசிய இடர் நிலைமைகளை அரசு மிகச் சரியாக கையாண்டு வருகின்றது. தொடர்ந்தும் அதே வேலைத் திட்டங்கள் சரியாக முன்னெடுக்கப்படும். அரசு முன்னெடுக்கும் வேலைத் திட்டங்களுக்கு எதிர்க்கட்சியினரை இணைத்துக் கொள்ளவும் அரசு தயாராக உள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் உலகளவில் அடர் நிலையாக மாறியுள்ள வேளையில் இதிலிருந்து மீளும் வேலைத்திட்டத்தில் சகல தரப்பையும் இணைத்துக்கொண்டு அவர்களின் கருத்துக் காரணிகளை கேட்டு பொதுவான வேலைத் திட்டம் ஒன்றை உருவாக்குவதில் அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய அனைவரும் இணைந்து செயற்பட முடியும். என்றார். (ஏ)

**யாழ்ப்பாண மாவட்டச் செயலக இடர் முகாமைத்துவப் பிரிவு வெளியிட்டுள்ள விவரம்.**

**உலர் உணவுப் பொருட்கள் மற்றும் மருந்து வகைகளை வீடுகளுக்கு விநியோகிக்கக் கூடிய நிறுவனங்களின் விவரங்கள்**

| இல | நிறுவனத்தின் பெயர் | முகவரி | தொடர்பு இல | விநியோகிக்கவுள்ள பொருட்களின் விபரம் |
|---|---|---|---|---|
| 1. | ஜெகன் களஞ்சியம் | 477, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். | 021 222 5035<br>0774836923 | உணவுப் பொருட்கள் மற்றும் பலசரக்குப் பொருட்கள் |
| 2. | ஜித் பூட்சிட்டி | 127, கண்டி வீதி, யாழ்ப்பாணம். | 021 222 1848<br>077 2867561 | உணவுப் பொருட்கள் மற்றும் பலசரக்குப் பொருட்கள் |
| 3. | நோத்வே பூட்சிட்டி | 184, பலாலி வீதி, திருநெல்வேலி. | 021 222 6002 | உணவுப் பொருட்கள் மற்றும் பலசரக்குப் பொருட்கள் |
| 4. | சிவன் ஸ்ரோர்ஸ் | பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி. | 021 222 8180<br>077 8558761<br>077 4329975 | உணவுப் பொருட்கள் மற்றும் பலசரக்குப் பொருட்கள் |
| 5. | குகன் ஸ்ரோர்ஸ் (Pvt) Ltd. | 180, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். | 077 3921 662 | உணவுப் பொருட்கள் மற்றும் பலசரக்குப் பொருட்கள் |
| 6. | ஸ்ரார் பூட் ஸ்ரோர் | 34, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில். | 077 4042528<br>077 7667457<br>076 7845769 | உணவுப் பொருட்கள் மற்றும் பலசரக்குப் பொருட்கள் |
| 7. | சிறிரங்கன் என்ரபிறைஸ் | 370, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். | 021 222 2027<br>077 7863024 | உணவுப் பொருட்கள் மற்றும் பலசரக்குப் பொருட்கள் |
| 8. | அம்பாள் ரேடர்ஸ் | 324, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | 021 222 4103<br>077 4607921 | உணவுப் பொருட்கள் மற்றும் பலசரக்குப் பொருட்கள் |
| 9. | தேனு சுப்பர் மார்ட் | 51, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. | 077 0812832<br>077 7110075 | உணவுப் பொருட்கள் மற்றும் பலசரக்குப் பொருட்கள் |
| 10. | ரி.சி.ரி. பல்பொருள் வாணிபம் | 527, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | 021 221 9813<br>076 9699957 | உணவுப் பொருட்கள் மற்றும் பலசரக்குப் பொருட்கள் |
| 11. | யாழ்.வைத்தியசாலை | 315, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி. | 021 222 3533<br>077 3107685 | மருந்துப் பொருட்கள் |
| 12. | இரட்ணம் மருந்தகம் | 384, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். | 021 222 2667<br>076 0586050<br>077 3069506 | மருந்துப் பொருட்கள் |
| 13. | சிற்றி மெடிக்கல் கெயார் | 588, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். | 077 8511874 | மருந்துப் பொருட்கள் |
| 14. | ஜெகன் பார்மசி | 462, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | 077 7283794<br>021 2223191<br>021 222 4336 | மருந்துப் பொருட்கள் |

## பிராந்திய ரீதியில் ஊரடங்கு தளர்வு

### மாவட்டச் செயலகத்தால் ஆலோசனை முன்வைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27

கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களைப் போன்று யாழ்ப்பாணத்திலும் ஊரடங்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு பிராந்தியத்திலும் வெவ்வேறு நேரங்களில் ஊரடங்கை நீக்குவது தொடர்பில் ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

யாழ்ப்பாணத்தில் இன்று காலை 6 மணிக்கு ஊரடங்குச் சட்டம் நீக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டபோதும், அது மறு அறிவித்தல் வரையில் நீடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஒவ்வொரு பிரதேசங்களிலும் ஒவ்வொரு நேரம் ஊரடங்கை தளர்த்துவதன் ஊடாக மக்கள் கூட்டம் கூடுவதைத் தடுக்க முடியும்.

எனவே குடாநாட்டில் ஒவ்வொரு இடத்திலும் ஊரடங்கை வெவ்வேறு நேரங்களில் தளர்த்துவது தொடர்பான பரிந்துரை முன்வைப்புள்ளதாக அறியமுடிகின்றது. (ஒ,5)

## மிருசுவில் கொலையாளி விடுவிப்புக்கு கண்டனம்

### கூட்டமைப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27

மிருசுவில் வழக்கில் குற்றவாளியாக இனம் காணப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட சார்ஜண்ட் சுனில் ரத்நாயக்கவுக்கு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பானது இலங்கையில் இவ்வாறான குற்றங்களுக்கு தண்டனை வழங்கப்படாது என்பதை உறுதி செய்கின்றது.

இந்த நடவடிக்கையை வன்மையாகக் கண்டிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தனது முகநூலில் பதிவிட்டுள்ளதாவது:

மிருசுவில் வழக்கில் குற்றவாளியாக காணப்பட்டு தண்டிக்கப்பட்ட சார்ஜண்ட் சுனில் ரத்நாயக்கவுக்கு ஜனாதிபதியின் மன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்கப்பட்ட செய்தி உண்மையாயின் அது கடுமையாக கண்டிக்கப்படத்தக்கது. பல இவ்வாறான வழக்குகள் முன்னெடுக்கப்படாத நிலையிலும் வேறு பலர் மேன்முறையீட்டில் விடுவிக்கப்பட்ட போதும் இந்த ஒருவர் தான் அவற்றிற்கு விதிவிலக்காக இருந்தவர். இலங்கையில் இவ்வாறானகுற்றங்கள் தண்டிக்கப்பட மாட்டா என்பதை இது உறுதி செய்கிறது- என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ,5)

## பலசரக்கு...

உள்ள மக்கள் வாகனங்களை பயன்படுத்தாது நடந்து சென்று தமக்கு தேவையான பொருள்களை வாங்குவ தற்கு அனுமதியளிக்கபட்டுள்ளது என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அறி வித்துள்ளார்.

இதுதொடர்பில் ஆளுநரின் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வடமாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கு அமை வாக வடமாகாண ஆளுநர் செயலகத்தில் யாழ். மாவட்ட கட்டளை தளபதி, யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர், யாழ். மாவட்டச் செயலர் மற்றும் ஏனைய அரச உயர் அதிகாரிகள் ஆகியோரின் பங்கு பற்றலில் நேற்றுக் கலந்துரையாடல் இடம்பெற்றது. ஊரடங்கு நேரத்தில் பொதுமக்களுக்கான சேவைகள் கிடைப்பதற்கான நடைமுறைகள் தொடர்பில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

ஊரடங்கு நேரத்தில் பொதுமக்களுக்கான சேவைகள் கிடைப்பதற்கான நடைமுறைகள்

**பலசரக்கு பொருள்கள்**

உள்ளூர் பலசரக்கு கடைகள் பொது மக்களின் தேவை களுக்காக தொடர்ந்து திறந்து நடாத்துவதற்காக அனு மதி வழங்கபட்டுள்ளது. சுற்று வட்டாரத்தில் உள்ள மக்கள் வாகனங்களை பயன்படுத்தாது நடந்து சென்று தமக்கு தேவையான பொருள்களை வாங்குவதற்கு அனுமதியளிக்கபட்டுள்ளது. வாகன பயன்பாடு அனு மதிக்கப்படமாட்டாது. பலசரக்கு கடைகளில் அவசிய மான ஐந்து அல்லது ஆறு பொருள்களை 500 ரூபா 1000 ரூபா பெறுமதியான பொதிகளாக்கி வாகனங்க ளில் கொண்டு சென்று விற்பனை செய்யமுடியும்.

**மரக்கறி வகைகள்**

தற்போது உள்ள சூழ்நிலையில் சந்தைகளை இயக்கு வதில் உள்ள நடைமுறை சிக்கல்களை கருத்தில் கொண்டு பின்வரும் ஒழுங்குகள் செய்யபட்டுள்ளன. மரக்கறி வியாபாரிகள் தாங்களாகவே உற்பத்தியாளர் களிடமிருந்து கொள்வனவு செய்து உள்ளூரில் விற் பனை செய்யலாம். இதற்கான ஏற்பாடுகளை பிரதேச செயலர், உள்ளூராட்சி சபைகள், கமநல சேவைகள் திணைக்களம், விவசாய திணைக்களம் என்பன இணைந்து பொருத்தமான நடைமுறைகளை ஏற்படுத் தல் வேண்டும்.

**கடல் உணவுகள்**

ஊரடங்கு நேரத்தில் மீன் பிடிப்பதற்கான அனுமதி வழங்கபட்டுள்ளது. சந்தைகளில் மீன் விற்பது தடை செய்யபட்டுள்ளது. மாற்று ஒழுங்காக அவற்றை வியா பாரிகள் வீதிகளில் கொண்டு சென்று விற்பனை செய் வதற்கு அனுமதியளிக்கபட்டுள்ளது.

**வெதுப்பகம்**

ஊரடங்கு நேரத்தில் வெதுப்பகங்கள் இயங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. வெதுப்பகங்களின் உற்பத்திகளை நடைமுறையில் உள்ள விநியோக முறைப்படி வாகனங்கள் மூலம் மக்களுக்கு விநியோ கிப்பதற்கு அனுமதி வழங்கபட்டுள்ளது.

**அரிசி ஆலை**

அரிசியின் சீரான விநியோகத்தை மேற்கொள்வதற் காக அரிசி ஆலைகள் இயங்குவதற்கு அனுமதியளிக் கபட்டுள்ளது. வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்க ளில் இருந்து யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு அரிசி கொண்டு வருவதற்கு அனுமதியளிக்கபட்டுள்ளது. வடமாகாணத்துக்கான அரிசி இருப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு ஏனைய மாகாணங்களுக்கு அரிசி கொண்டு செல்வது தொடர்பாக உரிய மாவட்ட மாவட்டச் செயலர் களுடன் கலந்துரையாடி தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

**ஐஸ் தொழிற்சாலை**

மீன் பிடித் தொழிலுக்கு தேவையான ஐஸ் கட்டிகளை உற்பத்தி செய்வதற்கான அனுமதியளிக்கபட்டுள்ளது.

**மருந்தகம்**

மருந்தகங்கள் ஊரடங்கு நேரத்தில் திறந்திருக்கும் மருத்துவரின் மருத்துவ குறிப்பேடு மற்றும் கிளினிக் கொப்பிகளுடனும் சென்று மருந்துகளை பெற்றுகொள் ளலாம். கிளினிக் கொப்பியுடன் அருகில் இருக்கும் மருத்துவமனைக்குச் செல்ல நோயாளர்களுக்கு அனு மதி வழங்கபட்டுள்ளது. இவ்வொழுங்குகளை யாழ்ப் பாணம் மாவட்டத்தில் உடனடியாக நடைமுறைப்படுத் துவதுடன் ஏனைய மாவட்ட மாவட்டச் செயலர்கள் தங்கள் மாவட்ட பாதுகாப்புபடையினர் மற்றும் பொலி ஸாருடன் இணைந்து அவர்களின் ஆலோசனை களை பெற்று நடைமுறை படுத்துமாறும் அரச சுற்ற றிக்கைகள் மற்றும் தற்போதுள்ள சிறப்பு நடைமுறை களுக்கு அமைவாக இந் நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது, என்றுள்ளது.

(ஓ.5)

## கழுத்தறுத்து..

வுக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ பொதுமன்னிப்பு வழங்கி நேற்று விடுதலை செய்துள்ளார்.

**நடந்தது என்ன?**

போர் காரணமாக மிருசுவிலிருந்து இடம்பெயர்ந்து கரவெட்டி நாவலர்மடம் பகுதியில் வசித்து வந்த, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உள்ளிட்ட 9 பேர், தமது சொந்த வீடுகளைப் பார்ப்பதற்கு 2000 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி புறப்பட்டனர். மிருசுவில் வடக்கு படித்த மகளிர் குடியேற்றத் திட்டப் பகுதியில் அமைந்திருந்த அவர்களது வீடுகளைப் பார்ப்பதற்குச் சென்ற 9 பேரும் அன்றைய தினம் மீண்டும் திரும்பி வரவில்லை. மறு நாள் 20 ஆம் திகதி மாலை, வீடு பார்க்கச் சென்ற 9 பேரில் ஒருவர் மாத்திரம் அடிகாயங்களுடன் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

அவர் வழங்கிய சாட்சியத்தில், தமது வீடுகளைப் பார்த்துக் கொண் டிருந்த வேளை அங்கு வந்த இராணுவத்தினர், தான் உள்ளடங் கலாக ஒன்பது பேரையும் கைது செய்து அழைத்துச் சென்றனர். கண்களைக் கட்டி கடுமையாகத் தாக்கினர். இதன் போது காயங் களுடன் தான் தப்பித்து வந்ததாகத் தெரிவித்திருந்தார்.

டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதி, அவர் தெரிவித்த குறிப்புக்கு அமைய மிருசுவில் வடக்கு படித்த மகளிர் குடியேற்றத் திட்டப் பகுதியிலுள்ள தென்னங் காணியில், புதிதாக வெட்டப்பட்ட குழியிலிருந்து காணாமற் போயிருந்த எட்டுப் பேரினதும் சடலங்கள் மீட்கப்பட்டன. இதனையடுத்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது இராணுவத்தின் சார்ஜன்ட் தரத்தைச் சேர்ந்த அதிகாரி ஒரு வர் உள்ளிட்ட எட்டு இராணுவத்தினர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். 2015ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் திகதி கொழும்பு உயர் நீதிமன்றம் வழக்கின் தீர்ப்பை வழங்கியது. இதன்போது இராணுவ சார்ஜென்ட் சுனில் ரத்நாயவுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில் சுனில் ரத்நாயக்க ஜனாதிபதி கோத்தாபய ராஜ பக்ஷவால் பொதுமன்னிப்பு வழங்கி விடுவிக்கப்பட்டு, வீடு சென் றுள்ளார். இந்தத் தகவலை அரச ஊடகங்கள் இன்று வெளியிட் டன.நாடு முழுவதும் கொரோனா வைரஸ் அச்சத்தில் மூழ்கியுள்ளது. நாடு முழுவதும் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு காரணமாக மக்கள் முடங்கியுள்ளனர். இவ்வாறானதொரு வேளையில் சுனில் ரத்நாயக்கா ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்கி விடுவிக்கப்பட்டுள்ளார். (ஓ.5)


# ஓராண்டு நினைவஞ்சலி

## அமரர்
## செல்லத்துரை கனகசபாபதி



மூளாயூரைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டு வாழ்ந்து வரலாறு படைத்த அமரர் உயர்திரு செல்லத்துரை கனக சபாபதி (BA, LLB, MA அரசியல்) ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவி ருத்தி உதவி ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, சத்திய ஆணையாளர், கம்பனிச்செயலாளர் அவர்களை அவர் மறைந்த ஓராண்டு நிறைவில் நாம் நினைவு கூர்வோம்.

கல்வியிலோர் கடலாகி கலங்கரையும் தானாகி
வல்லமை சேர் வடிவாகி வரலாற்றுத் தடமாகி
எல்லையில்லாப் பட்டங்கள் பதவிகளைத் தான் வகித்தும்
பல்லோரும் போற்றிடவே பணிவோடு பணி புரிந்த
சொல்லுதற் கரிய எங்கள் குடும்பத்தின் தலைவரானார்
செல்லத்துரை கனகசபாபதி சிவத்தோடு கலந்தின்று
மெல்லவோர் ஆண்டதுவும் மேதினியில் மறைந்ததென்றே
அல்லும் பகலும் நாம் அவரையிங்கு நினைவுகூருவோம்!

திதி: 13.04.2020
நினைவு நாள் 26.03.2020

தாய் மடியில் 25.07.1949 | தலைவன் அடியில் 26.03.2019

பாசம் மிக்க குடும்பத்தின் தலைவனாரை
அன்போடு நினைவு கூறும்
குடும்பத்தவர்கள்

மனைவி சிவசக்தி, மகன் வாசுதேவா, மகள் மதுரா,
மருமகள் ஜென்சிலா, மருமகன் சிவகுமாரு,
பேரப்பிள்ளைகள் அனுராம், ஆரணி, ஹரிணி, ஆதிரையன்.
021 225 2154

# நடமாடும் சேவையில் பொருள்கள் விற்பனை

## சங்கங்கள் இன்று ஆரம்பிக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 27

வடக்கு மாகாணத்தில் உள்ள சகல பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களும் நடமாடும் சேவை மூலம் அத்தியாவசிய பொருள்களை விநியோகிக்கும் நடவடிக்கைகளை இன்று ஆரம்பிக்கவுள்ளன.

வடக்கு மாகாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் உதவியுடன், சகல கூட்டுறவுச்சங்கங்களுக்கும் கொழும்பில் இருந்து பொருள்கள் எடுத்து வரப்பட்டுள்ளன. சீனி, பருப்பு, ரின்மீன், மா, என்பன கடந்த புதன்கிழமை எடுத்து வரப்பட்டன. இவை சகல கூட்டுறவுச்சங்கங்களுக்கும் நேற்று விநியோகிக்கப்பட்டன.

பொருள்கள் யாவும் கட்டுப்பாட்டு விலையில் நுகர்வோருக்குவழங்கப்படவேண்டும் என்று மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நுகர்வோருக்கு சென்றடையக் கூடியவாறு பொருள்கள் யாவும் நடமாடும் சேவையூடாக வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-17)

# கூட்டுறவாளர்களுக்கு விரைவில் நிவாரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ். குடாநாட்டில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கு விரைவில் நிவாரணம் வழங்குவதற்கு சங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் பணியாளர்கள், சீவல் தொழிலாளர்கள் மற்றும் அங்கத்தவர்களின் நாளாந்த வாழ்வாதாரம் தற்போதைய சூழலில் பெரிதும் பாதிப்படைந்துள்ளதால், அவர்களுக்கு உலர் உணவுப் பொருள்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வலிகாமம் கொத்தணியின் தலைவர் எஸ்.செல்வராசா தெரிவித்துள்ளார்.

சங்கங்களில் இருந்து உணவுப் பொருள்களைப் பெற்று அவற்றை இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க-17)


# மரண அறிவித்தல்

## சின்னத்துரை சுந்தரலிங்கம்

பிறப்பு: 28.06.1951

இறப்பு: 22.03.2020

(முன்னாள் அரசாங்க கட்டிட ஒப்பந்தகாரர், முன்னாள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர், முன்னாள் பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ. சங்கத் தலைவர், முன்னாள் லயன்ஸ் கிளப் தலைவர் (தற்போது உறுப்பினர்), முன்னாள் வர்த்தக தொழிற்துறை மன்றம் ஆளுநர் சபை உறுப்பினர், இயக்கச்சி மல்வில் கிருஸ்ணன் கோயில் செயலாளர், பேச்சி அம்மன் கோயில் உப தலைவர்)



பச்சிலைப்பள்ளி பளையைப் பிறப்பிடமாகவும், 211 கண்டி வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சுந்தர லிங்கம் (22.03.2020) ஞாயிற்றுக் கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சேர்மன் சின்னத்துரை மற்றும் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராமலிங்கம் புனிதவதி தம்பதியரின் அன்பு மருமகனும், தேவகியின் அன்புக் கணவரும், பிரியதர்சினி (Fashion Designer), சிறிஜனார்த்தனன் (Eng), காயதர்சி (Eng), திருணதர்சி (Dr), சிறிசயந்தன் (Dr) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (23.03.2020) திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சிந்துபாத்தி இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
0777222010

211, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.


### ஊரடங்கு வேளையிலும்

# மீனவர்கள், விவசாயிகள் தொழில் நடவடிக்கையில்

மன்னார், மார்ச் 27

மன்னார் மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து அமுலில் உள்ள போதும், கடற்றொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் தங்கள் அன்றாட தொழில் நடவடிக்கையில் நேற்று ஈடுபட்டனர்.

குறுகிய கடல்மைல் தூரங்களுக்குள் மீனவர்கள் தங்கள் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டனர். பிடிக்கப்பட்ட மீன்களை ஒரு சில வியாபாரிகள் வீடு வீடாகச் சென்று விற்பனை செய்தனர்.

அத்துடன் தலைமன்னார் பகுதிக்கு மீன்களைக் கொள்முதல் செய்வதற்கு, வெளி மாவட்டத்திலிருந்து இரண்டு பாரவூர்திகள் வருகை தந்தன.

அதேவேளை விவசாயிகளும் தமது வயல்களில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (க-60)

# வேலணை பிரதேசத்தில் கிருமி நாசினி விசிறல்





வேலணை, மார்ச் 27

கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்த இலங்கை அரசு பல்வேறு முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அந்தவகையில் யாழ்ப்பாண மாவட்டத்தின் வேலணை பிரதேசத்தின் பொது இடங்களிலும் நேற்று கிருமி நாசினிகள் விசிறப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக நாளைமுதல் வேலணை பிரதேச சபை ஆளுகைக்கு உட்பட்ட மண்டைதீவு, அல்லைப்பிட்டி, புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய உப அலுவலகங்களின் முக்கிய பகுதிகளுக்கும் குறித்த கிருமி நாசினி விசிறப்படவுள்ளன. (ஐ)

# வங்கிகள் திறக்கவில்லை!

கொழும்பு, மார்ச் 27

வங்கிச் சேவை அவசர சேவையாக அரசு அறிவித்திருந்த போதிலும் வடக்கு மாகாணத்தில் அரச மற்றும் தனியார் வங்கிகள் நேற்றுத் திறக்கப்படவில்லை. அவசர சேவையாக வங்கிச் சேவையையும் அறிவித்தமை தொடர்பான சுற்றறிக்கை வெளிவராமையே இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

ஊரடங்குச் சட்டம் காரணமாக வங்கிகள் மூடப்பட்டுள்ளன. ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் நேரங்களில் வங்கிகளில் மக்கள் பெருமளவு கூடுகின்றனர். இந்த நிலையில் வங்கிச் சேவையை அவசர சேவைக்குள் உள்ளீர்ப்பதாக ஜனாதிபதி கோத்தாபய நேற்று முன் தினம் அறிவித்திருந்தார்.

ஆனால் வடக்கு மாகாணத்தில் நேற்று வங்கிகள் திறக்கப்படவில்லை. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ வங்கிச் சேவையை அவசர சேவையாக அறிவித்திருந்த போதிலும், இது தொடர்பான சுற்றறிக்கை இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்படவில்லை என்று கூறப்படுகின்றது. நேற்று மதியம் அல்லது நாளை இது தொடர்பான சுற்றறிக்கை கிடைக்கப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ.5)

# காரைநகரில் உலர்உணவு

காரைநகர், மார்ச் 27

காரைநகர் பிரதேச செயலர் பிரிவிலுள்ள வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் நேற்றுமுன்தினம் இலவசமாக வழங்கப்பட்டன.

5கிலோ அரிசி, 5கிலோ மா உள்ளடங்கலான இந்தப் பொதிகளை நாதன் நற்பணி மன்றத்தினர் காரைநகர் பிரதேச செயலகத்தின் ஊடாக விவரங்கள் பெற்று பிரதேச செயலக அலுவலர்கள் ஊடாக வழங்கினர்.

நாதன் நற்பணி மன்ற நிறுவுநரான சுவிஸ் நாட்டில் வதியும் சுப்பிரமணியம் கதிர்காமநாதன் காரைநகரிலுள்ள சுமார் மூவாயிரம் குடும்பங்களுக்கு இந்த நிவாரணப் பொதிகளை வழங்கினார்.

காரைநகர் தெற்கு, காரைநகர் கிழக்கு கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ளவர்களுக்கு இந்தப் பொதிகள் விநியோகிக்கப்பட்டன. ஏனைய பிரிவுகளுக்கும் இவை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-250)

# நெஞ்சகலா ஆறாம் மாத நினைவலைகள்

## செல்வி சுசிலாதேவி அருளானந்தம்

(யாழ் பல்கலைக்கழக கல்வியற்றுறை முன்னாள் தலைவரும், சிரேஸ்ட விரிவுரையாளரும்)

திதி : வளர்பிறை துவாதசி

அன்னை மடியில்
1951 . 01 . 19



ஆண்டவன் அடியில்
2019 . 09 . 29

அன்பின் உறைவிடமாய் பாசமாய் எம்முடன் வாழ்ந்த சகோதரியே உம்பிரிவு ஆறுமாதம் கடந்ததம்மா. உம்மையே நினைத் துருகி கண்ணீர் சிந்த வாழ்கின்றோம். ஆறுமாதம் எங்களைவிட்டு மறைந்து விட்டாலும் இன்றும் எங்களிடம் பாசமாக வந்துவிட்டு மௌனமாகச் செல்கின்றீர் அம்மா. ஈரவிழிகள் உமைத்தேட கனவுலகில் வருகின்றீர். எங்கள் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் பசுமையாக வழிகாட்டி நாங்கள் தவித்திட எங்கு சென்றீர்கள். வாடி உதிர்ந்து போனோம் அம்மா. பார்க்கும் இடம் எல்லாம் உங்கள் உருவ அசைவுகள் தான் தெரியுது அம்மா. உங்கள் வீட்டில் நீங்கள் எங்களுடன் இல்லாமல் சோகமான கலகலப்பில்லா வீடாக மாறியது. நீங்கள் எங்கு சென்றாலும் போற்றப்படும் பாராட்டுக்கள், கல்வி அறிவுகள், உங்கள் புகழ் மாறாதம்மா. உங்கள் அன்புமுகம் கண்டு ஆறவில்லை. உங்கள் துயிலும் கட்டிலைப் பார்க்கும் போது எங்கள் இதயம் வெடிக்குதம்மா. அன்பு, பாசம், இதயம் நிறைந்த பொக்கிஷம் நீங்கள் அம்மா. உங்களுக்கு எங்களை விட்டுப்பிரிய மனம் இருக்கவில்லையம்மா. ஆனால் இறைவன் திடீர் மறைவாக காட்டி கூட்டிச்சென்று விட்டார்.



ஈரேழு ஜென்மங்கள் கடந்தாலும் எங்கள் சகோதரியின் நினைவுகள் எங்களை விட்டு அகலாது அம்மா.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தேவாலய வீதி,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

நினைவகலா நெஞ்சமுடன்
சகோதரிகள் - தவமணிதேவி (அக்கா), றதி (தங்கை)
பேரன்மார் - லோஷன், நிதீஸன், தனுஷன்
பெறாமகன் - ஹரிகரன், கோகிலன்

## வலி. தெற்கில் உழவர் சந்தை

யாழ்ப்பாணம், மார்ச் 27
வலி. தெற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் உழவர் சந்தைகள் நேற்று வியாழக்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஊரடங்கு நேரத்திலும் உழவர் சந்தை நடைபெறும்.

இணுவில் கந்தசாமி கோயிலடி, இணுவில் ஆஸ்பத்திரி முன் பக்கம், இணுவில் கிழக்கு அண்ணமார் கோயிலடி, உடுவில் அம்பல வாணர் வீதி, குப்பிளான் சந்தி, மல்லாகம் ரயில் நிலைய வீதி, வடக்கு புன்னாலைக்கட்டுவன், தெற்கு புன்னாலைக் கட்டுவன், ஈவினை பிள்ளையார் கோயிலடி, மயிலங்காடு, கோட்டைக்காடு முருகன் கோயிலடி எதிர்ப் பக்கம், மலப்பை கோயிலடி, வரிப்புலம் கலைவாணி சனசமூக நிலையம், சுன்னாகம் கல்லக் கட்டுவன், சைவ சன்மார்க்க பாடசாலை, கந்தரோடை குளத்தடி, வட்டகிளி அம்மன் கோயிலடி, சங்குவேலி, சுன்னாகம் ஐயனார் கோவிலடி, உடுவில் நாச்சியம்மன் சனசமூக நிலையம், நாகம்மாள் கோவிலடி ஆகிய இடங்களில் உழவர் சந்தை நடைபெறும்.

பொதுமக்கள் வியாபாரம் நடைபெறும் நேரங்களில், பொருள்களை வாங்கும் போதும் தனிநபர் சுகாதாரத்தை பேணவும். வெளியே செல்லும் போது முகத்துக்கு கவசம் அணிந்து, இடைவெளியை பேணிச் சுத்தமான, சுகாதாரமான முறையில் பொருள்களைக் கொள்வனவு செய்யவும். வியாபாரிகளும் சுகாதாரத்தைக் கடைப் பிடிக்கவும் என்று வலி. தெற்குப் பிரதேச சபைத் தவிசாளர் கேட்டுள்ளார். (க-159)

# கூட்டமைப்பின் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் நிதி ஒதுக்கீடு

## தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 26**

**ஊரடங்குச் சட்டம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் மாதச் சம்பளத்திலிருந்து ஒரு தொகை நிதி ஒதுக்கப்படவுள்ளதாக, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.**



தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் ஊரடங்குச் சட்டம் காரணமாக அன்றாடம் தொழில் செய்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வருமானமின்றி முடங்கிப் போயுள்ளனர். அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிரதிநித்துவப்படுத்தும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் மாதச் சம்பளத்தில் ஒரு தொகை நிதியை நிவாரண நடவடிக்கைக்கு ஒதுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கூட்டமைப்பின் ஆளுகையின் கீழ் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் நிவாரண நடவடிக்கைக்காக சபை நிதியைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இது தொடர்பில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருடன் கலந்துரையாடியதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சோ. சேனாதிராசா தெரிவித்தார். மேலும் இந்த விடயம் தொடர்பில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களான த. சித்தார்த்தன், செல்வம் அடைகலநாதனுடனும் பேச்சு நடத்தியதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஒ,5)

# வீடுகளுக்கு பொருள் விநியோகம் தபால் ஊழியர்களின் உதவி

## அரசு அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 27
மருந்துகள் முதலான அத்தியாவசிய பொருள்களை வீடுகளுக்கு விநியோகிக்க தபால் ஊழியர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ள முடியுமா என்பது குறித்து அரசு கவனம் செலுத்தியுள்ளது. இது தொடர்பாக ஆராயுமாறு தபால் மா அதிபருக்கு தாம் ஆலோசனை வழங்கியிருப்பதாக உயர்கல்வி, தொழில் நுட்பம் புத்தாக்க மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்களுடனான சந்திப்பில் அமைச்சர் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது: தற்போது தபால் ஊழியர்கள் தபால் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. இவர்கள் அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த மக்களை நன்கு அறிவர். இதனால் இந்த விநியோகப்பணிகளை சிறப்பாக இவர்களால் மேற்கொள்ள முடியும். அத்தியாவசிய விநியோக நடவடிக்கைகளுக்காக தமது அமைச்சுக்கு உட்பட்ட தபால் திணைக்களத்தின் வாகனங்களை வழங்குமாறு பிராந்திய தபால் அலுவலங்களுக்கு ஆலோசனை வழங்கியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஒ,5)

## கொரோனா தடுப்பிலிருந்து 615 பேர் குடும்பங்களுடன் இணைப்பு

இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கொரோனா தனிமைப்படுத்தல் நான்கு முகாம்களில் இருந்து நேற்று 615 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர் என இலங்கை இராணுவ தடுப்பு மருத்துவ சேவை பொதுச் சுகாதார நிபுணத்துவ துணை இயக்குனர், மருத்துவர் கேணல் சவீன் சேமகே தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் புனானை மட்டக்களப்பு பல்கலைக் கழகம் மற்றும் மியான்குளம் இராணுவ முகாம் ஆகிய கொரோனா தடுப்பு முகாம்களில், கடந்த 14 நாட்களாக தடுத்து வைக்கப்பட்டு, மருத்துவ கண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்தவர்களே எவ்விதமான நோய்த்தொற்றும் இல்லாத நிலையில், தங்களின் குடும்பங்களுடன் நேற்று இணைக்கப்பட்டனர். (ந-150)





## கொரோனா தடுப்பு கலந்தாய்வுக் கூட்டம்

கொரோனா தடுப்பு நடவடிக்கை மற்றும் மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை மேற்கொள்வது தொடர்பாகவும், மக்கள் கூடும் இடங்களில் நெரிசல் ஏற்படும் போது நோய்த்தொற்று இலகுவாக பரம்பல் அடைவதை தடுப்பதற்காகவுமான, அவசர கூட்டம் நேற்று சங்கானை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

சங்கானை பிரதேச செயலாளர் திருமதி பொ. பிறேமினி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் வலி. மேற்கு பிரதேச சபைத் தவிசாளர், சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பொலிஸ் அலுவலர்கள், படை அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், வர்த்தக சங்கத்தினர், வேல்ட் விஷன் நிறுவன பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் சங்கானை, வட்டுக் கோட்டை, அராலி, சுழிபுரம் ஆகிய பிரதேசங்க ளில் தற்காலிக சந்தைகள் கூடவுள்ளன. அத்துடன் ஊரடங்கு நேரத்தில் பொதுமக்களுக்கான உணவுப்பொருட்களை விநியோகிப்பதற்கு ஏற்ப தொலைபேசி மூலம் விநியோகம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என தீர்மானிக் கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-20)

## திருகோணமலையில் 469 பேர் வீடுகளில் தனிமைப்படுத்தலில்

வெளிநாடுகளிலிருந்தும் புத்தளம், நீர்கொழும்பு, கொழும்பு ஆகிய மாவட்டங்களிலிருந்தும் வந்தவர்கள் 469 பேர் தற்போது வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுக் கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வீ. பிரேமானந்த் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் இதுவரையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான எவரும் இனங்காணப்படவில்லை.

இருப்பினும் இரண்டு நோயாளிகள் சந்தேகத்துக்கிடமான முறையில் அடையாளம் காணப்பட்டு மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு கொரோனா தொற்று இல்லை என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களின்படி வேறு இடங்களிலிருந்து திருகோணமலை மாவட்டத்துக்கு வந்த 738 பேர் தனிமைப்படுத்தப்பட்டுக் கண்காணிக்கப்பட்டு வந்தனர். அவர்களில் 269 பேருக்கு எந்தவிதமான தொற்றுக்களும் இல்லை என்று உறுதி செய்யப்பட்ட பின்னர் அவர்கள் வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்று மேலும் தெரிவித்தார். (கு)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.03.2020இல் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.